1525

REGD. No. M. 2913.

ஆர்யதர்மம்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

சந்தா விபரம்.
[தபால் செலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 3
ஆறுமாத சந்தா	...	ரூ. 1½

தனிப்பிரதி ஓரணா
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணா 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்கிரம-௵ புரட்டாசி-மீ 11௳ 1940-௵ செப்டம்பர்-மீ 26௳ | ல-38

வாரக் குறிப்புகள்

(ஸ்ரீவத்ஸ வெ. ஸோ. சர்மா)

ஸ்ரீலலிதோபாக்யான அரங்கேத்துபடி!! 27-௳ ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஸன்னதியில் பூஜாதி வைபவத்துடன் ஸ்ரீ வரகவி. சுப்ரமண்ய அய்யர் முன்னிலையில் டிை வைபவம் நடைபெறும். அதேதினத்தில் ஸ்ரீஜகத்குரு பாதார விந்தத்திலும் ஸமர்ப்பிக்கப்படும். ஆர்யதர்மம் ஆபீஸ், சென்னை சாந்தா [illegible] ராமும் & கோ, புரசை இவ்விடங்களில் விலை. ரூ. 2. க்கு புத்தகம் கிடைக்கும்.

எதிலும் பழையதே சிறந்தது! என்ற கொள்கை வேரூன்றுகிறது. சென்னை நகர ஸபை கமிஷனர் செலவில்லாத இந்தியா விளையாட்டே சிறந்த தென்கிறார்.

இதுவோ அஹிம்ஸை! கள்ளிக்கோட்டையில் யுத்த எதிர்ப்பு கூட்டத்தில் பல உயிர் போயின. மலையாளம் ப்ரதிநிதி இப்போதே ஸத்யாக்ரஹம் ஆரம்பிக்க வேண்டுமென்கிறார்.

ஸிந்து அராஜகமதி கரிக்கிறது! யார் என்ன முறையிட்டும் ஸிந்து அரசாங்கம் உடனே தக்க நடவடிக்கை எடுத்து ஏழைகளைக் காப்பாற்ற முன் வரவில்லை!

மாகாண சண்டை! சென்னை நகர ஸபை இடைத் தேர்தல் விஷயமாக தமிழ் தெலுங்கு மாகாண காங்கிரஸ் கக்ஷிகளுக்குள் மனஸ்தாபம் மேற்பட்டு அதிகரிக்கிறது.

விவாஹாதி செலவைக்குறை! என ஜப்பான் குடிகளைச் சட்டத்தின் மூலமாக வற்புறுத்துகிறது. கொள்கை சரி! சட்ட நிர்பந்தம் கூடாது.

ஊன்றிப்படிக்குமா ? காந்தி ஸர்வாதிகாரியானதைக்கண்டு கொக்கரிக்கும் சில பத்திரிகைகள் சென்ற வாரம் நமது ஆர்யதர்ம தலையங்கத்தை பக்ஷபாதமின்றி படித்தல் நலம்.

எதிர்பார்த்ததே ! திருப்பதி வெங்கடேச்வர ஸர்வகலாசாலைக்கு கமிட்டி ஏற்பாடு செய்த போதே கலாசாலை நல்வழியில் நடை பெறுமா என ஸந்தேஹித்தோம். ஸ்ரீ மீமாம்ஸா கேசரி அ சின்னசாமி சாஸ்திரிகள் தலைமை ஆசிரியர் பதவியை விட்டு காசி சென்றார். ஏன் ?

பதரியில் சென்னை ஸத்ரம் ! சில லௌகிகர்கள் 50. ஆயிரம் ரூ: செலவில் ஆங்கு இத்தகைய அரியதர்மம் செய்ய முன் வந்து பணந்தேட ஓர் கமிட்டியும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மிக சிறந்த தர்மமாம.

காஞ்சியில் லக்ஷார்ச்சனை !! நவராத்ரியில் லோகக்ஷேமார்த்தம் ஸ்ரீ காமாக்ஷி அம்பாளுக்குப்ரதி தினம் நவாவரணபூஜை வேத பாராயணம் மாலை உபன்யாஸம் இரவில் கச்சேரிகள் நடக்கும் ஓர் ஸஹஸ்ர நாமார்ச்சனைக்கு 3 ரூ. பக்தர்கள் அர்ச்சனை நடத்தி அருள் பெறலாம்

ஹிந்து மஹா ஸபை !! டிஸம்பரில் மதுரையில் டிை மஹாநாடு நடக்க முயற்சி நடைபெறுகிறது. பல கக்ஷிகளைப் பார்த்த ஒருவரே தீவ்ரப்ரயத்நம் செய்கிறார். எதுவரைக்குமோ இது ?

உண்மைதானா ? ஹிட்லர் லண்டன் படை யெடுப்பை தத்காலம் நிறுத்திய தாக பல பத்ரிகைகள் கூறுகின்றன. அவன் கொழுப்பு அடங்கினாலன்றி அவனை நம்பக் கூடாது

இன்னுமதிக அதிகாரம் !! வைஸ்ராயுக்கு அரசபெருமான் தந்தார்.

ஸ்ரீமதா சார்யதர்சநம் !! அமரகலாவிலாஸினி தலைவர் ஸ்ரீலலிதோபாக்யானத்துடன் ஸ்ரீ ஜகத்குருவை இவ்வாரத் கடைசியில் தர்சிக்கச் செல்கிறார்.

மதுரையில் ஹிந்து மஹாஸபை

புண்ய தீர்த்தங்களும், காசி தீபமும் கொண்டு வரப்படும்

அகில ஹிந்து மஹாஸபைக் கூட்டமானது டிஸம்பர் 26௳ ஆரம்பித்து 3 தினங்கள் நடத்தப்படுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக சென்னையிலிருந்து ஸ்பெஷல் ரெயில் விடவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இந்தியாவிலுள்ள ஸகலபுண்ய தீர்த்தங்களிலிருந்தும் தீர்த்தங்கள் கொண்டுவரப்பட்டு அவை ஊர்வலமாக மஹாஸபைக்குக் கொண்டுவரப்படும் அதோடு ஸ்ரீ காசி விச்வேச்வர் கோவிலிலிருந்து கொண்டுவரப்படும் தீபமும் ஊர்வலமாக எடுத்து வரப்படும்

வைஸ்ராய்க்கு அதிக அதிகாரம்.

யுத்தகால அவஸரநிலைமையைக் கருதி ஏற்கனவே வைஸ்ராய் அவர்களுக்கு இந்தியா ஸம்பந்தப்பட்ட கார்யங்களில் விசேஷ அதிகாரம் மன்னரால் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இப்போது அது இன்னும் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. புதிதாகச் செய்யப்படும் சட்டங்களை ராஜசக்ரவர்த்தியின் அங்கீகாரத்திற்கு அனுப்பவேண்டுமென்ற நியமம் இப்போது தளர்த்தி விடப்பட்டிருக்கிறது. அவஸரநிலைமை ஏற்பட்டால் வைஸ்ராயே அரசருக்கு பதிலாக அனுமதி கொடுத்து விடலாம். இந்த அதிகாரத்தின் பலன் போகபோகத்தான் தெரியும்

ஆத்ரேய ரஸாயனம்.

நாடி நரம்புகளுக்குப் பலத்தைக் கொடுக்கும். சரீரபுஷ்டியைச்செய்யும் அசதி களைப்புச் சோர்வுகளை உடனே நிவர்த்திசெய்யும். நல்ல பசி எடுக்கும். இழந்த பலத்தை திருப்பி அளிக்கும். உத்தம ரஸாயனம்.

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர்ரோடு, திருச்சிராப்பள்ளி

ஸ்தாபகர்:-
V. B. நடராஜசாஸ்திரி,
ஆயுர்வேதாசார்ய (Regd)

லண்டனின் வெடிகுண்டு விழுகையில் ஏழை மக்களின் தீரம்.

லண்டன் முழுகாது

(லண்டன் தந்தி)

இரவு பகலாய் காட்டுமிராண்டித்தனமாய் ஜெர்மன் வெடிகுண்டுகளால் தாக்கப்படும் லண்டன் மாகாணத்தின் கடைத்தெருக்களையும் ஏழை மக்கள் வசிக்கும் கிழக் கோடியையும் நான் நாள் பூராவும் சுற்றிப் பார்த்து விட்டு வந்தேன்.

சேதமும், நாசமும் மிக அதிகம் தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஒரு ஒரு பாகத்தில், ஜன நடமாட்டத்திற்கு வாய்க்கில்லை என்று ஒவ்வொரு தெருவுமே அடைக்கப்பட்டிருந்தது. ஜனத்தை ஒன்றைக்கூடக் காணமுடியவில்லை.

கடைத்தெருக்களில்

இடிந்து சரிந்து கிடக்கும் குவியல்களும் கூட போலீஸாரும் போர் வீரர்களும் இன்னும் குறித்து தேடிக்கொண்டிருக்கிறார்கள். பல வீடுகளில் இன்னும் புகை கிளம்பிக்கொண்டிருக்கிறது. விமான அபாயத் தடுப்பு கோஷ்டிகளும் நெருப்பணைக்கும் கோஷ்டிகளும் தீரமாய்ப் பிரயாசைப்படுகிறார்கள்.

கடைத்தெருக்களில், கிழக் கோடியைப் போல் அவ்வளவு சேதமில்லைதான். என்றாலும், நகரத்தின் மிகப் பழைய பாகமாகிய இங்கும் சரியான அடி விழுந்திருப்பது உண்மையே. சரித்திரப் பிரசித்திப்பெற்ற பல வீதிகள் இடிந்த துண்டுகள் மயமாய்க் கிடக்கின்றன. சிதறிக் கிடக்கும் கண்ணாடிகளை உத்தேசித்து ஜனங்கள் தெரு மத்தியில் நடக்க வேண்டியிருக்கிறது. டி. 402/19-9.

ஏழைகள் விடுதிகளில்

ஆனால், கீழ்க்கோடி லண்டனில் தான் பெருத்த சேதம். இங்கே தான் தொழிலாளர்களும் சின்ன வியாபாரிகளும் மொய்த்திருப்பது. இந்திய மாலுமிகள் வசிப்பதும் இவ்விடத்திலேயே. கடல் துறைப்பிரதேசத்தையாவது ராணுவ இலக்கு எனலாம். லண்டன் கீழ்க்கோடியை ராணுவ இலக்கு என்று எப்படிப்பார்த்தாலும் கருதமுடியாது.

ஜெர்மன் விமானங்கள் விசியகுண்டுகள் கடல்துறைமீதும் ரயில்வே ஸ்டேஷன்மீதும் சரியாய் விழாமல் அப்பால் தான் விழுந்திருக்கின்றன. ஜெர்மனியருக்கு இலக்கில் பார்த்து குண்டுவீசத் தெரியாது என்பது உண்மையாயிருந்தாலும் கிழக்கோடியில் அவர்கள் வேண்டுமென்றே தான் குண்டு வீசியிருக்கவேண்டும். ஏழை மக்கள் நடுக்கமுற்றுப் பீதிகொள்ளவேண்டுமென்பதற்காகவே இங்கே மீண்டும் மீண்டும் வேண்டுமென்றே தாக்கியிருக்கிறார்கள்.

கண்ணற்ற படுகொலை

இது எங்கள் வழக்கமான போர் முறைதான் என்று நாஸிகள் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் இது கண்ணற்ற படுகொலை என்றே மனச் சாட்சியும் பொது அறிவும் சுட்டிக் காட்டும்.

நாஸிகள் என்ன எதிர்பார்த்திருந்தாலும் சரி ஒரு வீராவில் மட்டும் அவர்கள் மோசம் போயிருப்பது திண்ணம். பிரிட்டிஷ் குணம் தனக்குத் தெரியும் என்றுசொல்லும் ரிப்பன்டிராப்புக்கும் அப்படித்தான் ஆகியிருக்கும்.

பழிக்குப் பழி!

எனக்கும் பத்துவருஷப் பழக்கம் கீழ்க்கோடி லண்டன் வாசிகளுடன் உண்டு. கிண்டலும், இரைச்சலும், வேடிக்கையும் அவர்கள் சுபாவத்தில் கூரிய கத்திபோன்ற மாச்சரியத்துக்கு இன்று இடம் கிடைக்கும் என்று நான் முன் எப்போதும் நினைத்ததில்லை. டி. 402.

ஜெர்மனி, இப்படித்தாக்குவது தங்களுக்கு நேரில் விடுத்துள்ள ஒரு சவால் என்றே அவர்கள் கருதுகிறார்கள். ஜெர்மனி ஒரு நாள் விழும் என்று நம்பிக்கொண்டு இதெல்லாம் சகித்திருப்பது மட்டும் கூடாது. உதைக்கு உதைதப்பாமல் கொடுக்கவேண்டும் என்றே சிரிக்கிறார்கள்.

பெண்கள் கோபம்.

ஓரிடத்தில் கட்டிடங்கள் இடிந்து பலர் மாண்டுபோனதைக் சுட்டிக்காட்டிய காவலாள்கள் கூறினர் "இதெல்லாம் சகஜம் தான் ஐயா இதைப்பற்றிக் கவலைபடக் கூடாது. என்பது தெரியும் ஆனால் எங்கள் ஆசை என்னவென்றால் அந்தப் பயல்களுக்கு நாம் இன்னுமல்லமாய்க் கொடுக்க வேண்டும் அவ்வளவு தான்."

பொது விடுதி ஒன்றில் பல ஸ்திரீகள் கூடி நின்று பத்திரிகைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். லண்டன் தாக்குதல்கள் சம்பந்தமான தலைப்புகளை ஒரு பார்வைபார்த்து விட்டுப்பிறகு ஜெர்மனியில் பிரிட்டிஷ் விமானங்கள் இழைத்த சேதங்களை வரிவிடாமல் படிக்கத் தொடங்கினர்கள்!

குழந்தைகள் வீரம்.

இதற்குப் பிறகு நான் சிலரிடம் மெதுவாய் ஹிட்லருடன்ஒருவகையான சமாஸம் ஏற்படுத்திக் கொண்டதுபற்றி ஜாடையாச் சிலவார்த்தைகள் விட்டுப் பார்த்தேன் அவர்கள் என்னை எப்படிப் பார்த்தார்கள் தெரியுமா? கோபத்தால் பொசுக்கி விடுவார்கள் போலிருந்தது.

கிழக்குக்கோடி லண்டன் ஆண் பெண்கள் மன உறுதியைப் பற்றிச் சந்தேகமேயில்லை. ஆனால் குழந்தைகளிடம் மெதுவாய்ச் சில கேள்விகள் கேட்டேன். "பயமாயிருக்கிறதா"

"யாரு? நானு?" (சற்று நேரம் கழித்து,) "முதல் முதலிலே தூக்கிவாரித்தான்போடும் ஆனால், பயப்படாதேங்கோ ஸார்! உங்களுக்கும் பழக்கமாய்போயிடும்."

லண்டன் முழுகாது

கேரியரிங் போட்டுள்ள நாகரீக வாழ்க்கைதிட்டத்திற்கு அனுசரணையாய் லண்டன் எவ்வளவு சுலபமாய் மாறிவருகிறது!

ஒரு கடையிலிருந்த நகைகள் எல்லாம் சிதறிக்கிடந்தன. கடைக்காரர் சொன்னர்: 'கொஞ்சம் பொருங்கள். கண்ணாடித் துண்டுகளையும், வைரங்களையும் தனித்தனியாய்ப்பிரித்து வைத்துவிடுகிறோம். பிறகு வியாபாரம் ஆரம்பித்து விடுவோம்.' என்று

இன்னொரு கடை- சின்னகடை தான்- வெடிகுண்டினல் பாழாகி, அதன் அலங்காரக்'கேஸ்' வைத்திருந்த ஜன்னல் தூள்தூளாகி விட்டது. கடைக்காரர் அந்த ஜன்னலில் பெரிய 'யூனியன் ஜாக்' கொடியைத்தொங்கவிட்டு வைத்திருந்தார்.

தெருக்களில் கிராமபோன் சங்கீதமும் ரேடியோ பாட்டும் ஒலித்துக்கொண்டிருந்தது. பூக்காரன் ஒருவன் ஒரு புறத்தில், ரோஜாப்பூ,, டஜன் ஆறு பென்ஸ், "புது ரோஜாப்பூ, என்று கூவிக்கொண்டிருந்தான் பூ இதழ் உதிர்த்து விடும் போலிக்கிறது என்று நான் குறைசொன்னேன். 'போ ஐயா, வீடுகள் எல்லாம் உதிரும்போது பூ உதிருகிறது என்று சொல்லுகிறீரே, என்று பதில் கொடுத்தான் அவன்.

ஒரு ஹோட்டலில் பின்வரும் 'போர்டு தொங்க விடப்பட்டிருந்தது. "எல்லோருக்கும் நல்வரவு! ஜென்னல் உடைப்பவர் மட்டும் தேவை இல்லை.

வேறொரு பலசரக்குக் கடை—கட்டிடம் சாமான் எல்லாம் பாழ். ஆனால் வாசலில் தீரத்துக்கும் பரிதாபத்துக்கும் உதாரணமான ஒரு பலகை. அதில் "கடை மூடப்பட்டது. ஆனல் லண்டன் முழுகாது" என்று எழுதப்பட்டிருந்தது. டி. 402.

வைத்தகுறி தப்பாது!

பிரிட்டிஷ் விமானிகள் திறமை.

கேப்பல்ஸ் அறைக்கருகில் பெரியவெடி.

"டைமஸ்" பத்திரிகையின் மாட்ரிட் நிருபர் அனுப்பியுள்ள தந்தி இது:

மாட்ரிடுக்குவரும் கோபாவேசமபொங்கும் ஜர்மன் செய்திகளிலிருந்தும் ஸ்பானிஷ் நிருபர்கள் அனுப்பும் செய்திகளிலிருந்தும், பெர்லினில் ப்ரிட்டிஷாரின் தாக்குதல் எவ்வளவு வேலைசெய்கிறதென்று தெரிந்துகொள்ளலாம். பிரசாரமந்திரிசபைக் காரியாலயத்தில் டாக்டர்கெப்பல்ஸ் அறைக்கு மூன்றுகெஜதூரத்திலே 200பௌண்டு வெடியொன்று நிம்மதியாய் பதுங்கிக் கிடந்ததென்றால் இந்தவேலை நள்ளிரவிலே செய்யப்பட்டதென்றால், இதைப் பிரமாத திறமையென்றுதான் சொல்லவேண்டுமென்று மக்கள் கருதுகிறார்கள். ராணுவ இலக்குகளில்லாத இடங்களில் ப்ரிட்டிஷ் விமானங்களில்லாத இடங்களில் ப்ரிட்டிஷ் விமானங்கள் குண்டுபோடுவதாக தினம் அழும் அழுகையைக்கேட்டு ஸ்பானிஷ் மக்களுக்குக் காது புளித்துப் போய்விட்டது.

பஜனை உத்ஸவம்

நாகூர்,

நாகூரில் மேல அக்கிராஹாரத்தில். டி. வீராசாமி அய்யரால் ஸ்தாபிக்கப்பட்ட மடத்தில ஆவணி-மீ 30-உ ஸ்திரவாரமும் பானுவாரமும் வெகுவிமரசையாய் பலவூர் பாகவதோத்தமர்களால் பஜனையும் திவ்ய நாமங்களும் உத்ஸவங்கள் நடத்தி புரட்டாசி-மீ 1-உ சோமவாரம் ஷை வீராசாமி அய்யால் உமாமஹேஸ்வா விரத பூர்த்தி. வெகுவிமர்சையாய் நடந்ததுஅன்றுராத்திரி பிரம்மஸ்ரீ நாராயண தீக்ஷிதர் அவர்களால் வாமன சரித்திரம் உபன்னியாசம் நடந்தும் 2-உ தம்பதி பூஜையும் சதலதானங்களும் நடந்து பிராமண சமாராதனைகளும் நடந்த பின் காளியாக்குடி பிரம்மஸ்ரீ நடேச சாஸ்திரிகள் அவர்களால் உமாமஹேஸ்வரவிரத மகிமையை பற்றி உபன்னியாசமும் பிறகு பிரம்மஸ்ரீ நாராயணதீக்ஷிதர் அவர்களால் ஸீதாகல்யாணம் உபன்னியாசமும் நடந்து உத்ஸவமும் பூர்த்தி செய்யப்பட்டது.

(ந-நி)

அல்லயன்ஸ் கம்பெனி பிரசுரங்கள்

திருப்புகழ் பாராயண திருமுறை	1	4	0
நால்வர் சரித்திரம் காலிகோ	0	12	0
" " ராப்பர்	0	10	0
பாரதசாரம்	1	2	0
ஸ்ரீ ராமாயண வினவிடை	1	8	0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனர்தன அச்சுக்கூடம், லிமிடெட், கும்பகோணம்.

கீதாபக்தி யோகம்

கும்பகோணம் அத்வைத சபையில் நல்லூர் சுப்ரமண்ய தீக்ஷிதர் செய்த பிரஸங்கம்.

பகவான் கருணாமூர்த்தி ஸ்ரீவைகுண்டத்தில் ஸனகாதி யோகிகளை மட்டும் ஸம்ரக்ஷிப்பது பெரிய காரியமில்லை. பூலோகத்தில் அக்ஞர்களைத்தான் உத்தாரணம் செய்விக்க வேண்டும். பசியுள்ளவனுக்குத்தான் போஜனம் போடவேண்டும் என்ற உத்தேசத்துடன் க்ரியாசக்திமானான வாயுவுடைய பிரார்த்தனையால் பச்சிம சமுத்ர தீரத்தில் குருவாயூரில் அவதரித்து ஸகலப்ராணிகளையும் ஸம்ரக்ஷித்துக் கொண்டிருக்கிறார்.

सान्द्रानन्दावबोधात्मकमनुपमित ....

இடைவிடாத ஆனந்த வடிவு, உபமான சூர்யன், பரிச்சேதரஹிதர், நித்யமுக்தர், உபநிஷத் ப்ரதிபாத்யர், அக்ஞானிகளுக்கு அஸ்பஷ்டர். உபநிஷத்விசாரம் உத்தமாதிகாரிகளால் தான்முடியும் மற்ற அதிகாரிகளையும் உத்தாரணம் செய்விப்பதற்காக அர்ச்சுனனை நிமித்தீகரித்து நமக்காக சகலோபநிஷதர்த்தத்தையும் சங்கிரஹித்து கீதாமிருதத்தை உபதேசித்தார். அர்ஜுனன் சுத்தன் அவனுக்கு சோக மோஹம் கிடையாது. அது வியாஜம்தான் முதல் 6 அத்யாயங்களால் கர்மயோகத்தைச்சொல்லியிருக்கிறார். நடுவில் ஞான யோகத்தைச் சொல்லியிருந்தாலும் ப்ராதான்யம் கர்மயோகத்துக்குத்தான் பிறகு 6 அத்யாயங்களால் பக்தி யோகத்தையும் முடிவில் 6 அத்யாயங்களால் ஞானயோகத்தையும் சொல்லியிருக்கிறார்.

ज्यायसी चेत्कर्मणस्ते मता बुद्धिर्जनार्दन ।
तत्किं कर्मणि घोरे मां नियोजयसि केशव ॥

அர்ஜுனன் கேட்கிறான்:— "கர்மத்தைக் காட்டிலும் ஞானமார்க்கம் உயர்ந்ததானால் உனக்கு ப்ரியமான என்னை பந்தரூபமான கர்மாவில் ஏன் ஏவுகிறீர். நான் எதைச்செய்தால் சிரேயஸ்ஸை யடைவேனோ அதை நிச்சயித்துச் சொல்லவேண்டும்." பகவான் சொல்கிறார் பலத்தை விரும்பாமல் செய்யும் கர்மாவானது பந்தத்தை யுண்டு பண்ணாது ஸகாமமான கர்மாதான் பந்தஹேது. நீ அதைச்செய்து உத்தமாதிகாரியாக ஆக வேண்டும்.

"मोक्षसाधनसामग्र्यां भक्तिरेव गरीयसी"

கர்மம் முதலிய அநேக மார்க்கங்களில் பக்திதான் மேன்மையானது. மத்தியில் பக்தியை சொல்லியிருப்பதால் மத்யமணிநியாயத்தாலும் தேஹளீதீப நியாயத்தாலும் முன் சொன்ன கர்மா, பின் சொன்ன ஞானம் இந்த இரண்டிற்கும் பக்தி ஆவச்யகம் என்று தெரிகிறது मय्यासक्तमनाः पार्थ என்னிடத்தில் ஆசக்தியை வைக்கவேண்டும். பிரஹ்மானுபவத்தையடைய வேண்டிய உபாயத்தை சமக்ரமமாக சொல்கிறேன். இதனால் ஸம்சயம் எல்லாம் தீர்ந்துவிடும். அறியவேண்டிய விஷயம் பாக்கி இருக்காது, ஆத்மஞானத்தை யடைவது ரொம்பவும் துர்லபம். எவ்வளவு விக்னம் வந்தாலும் அதை பாராட்டக்கூடாது எனக்கு 2 ப்ரகிருதிகள் உண்டு. பிருதிவி முதலான 8 அசேதன வஸ்துக்கள் சேர்ந்தது அபரா. ப்ரகிருதி பந்தத்தைக் கொடுப்பதால் அது அபரம். இன்னொன்று சேதனரூபமான ஜீவன் பரப்ரக்ருதி இந்த இரண்டினாலும் ஜகத்தாக்கப்படுகிறது. எல்லா வஸ்துக்களுக்கும் இது காரணம் இந்தப்ரகிருதிகளுக்கும் நான் காரணம் உத்பத்திஸ்திதிலயங்கள் என்னிடத்திலிருந்து தானேற்படுகின்றன. ஸூத்ரத்தில் மணிகணங்கள் போல் 84 லக்ஷம் ஜீவராசிகளும் என்னிடத்தில் கோர்க்கப்பட்டிருக்கின்றன. நான் சூத்ரம் போன்றவன் என்று சொல்லிவிட்டுப் பிறகு விபூதிகளைச் சொல்கிறார்.

ப்ரதானமான வஸ்துக்களைச் சொல்லிவிட்டால் சகல வஸ்துக்களையும் சொன்னதாய் ஆய்விடும் ஜலத்தில் திருப்தியை யுண்டுபண்ணும் ரஸமாக நானிருக்கிறேன். சூர்யசந்திராளிடத்தில் ப்ரபையாகவும், வேதங்களின் ப்ரதானமான ப்ரணவமாகவும், ஸகல ப்ராணிகளுக்கும் ஆதாரமான ஆகாசத்தில் சப்தமாகவும், மனுஷ்யர்களிடத்தில் பௌருஷமாகவும், பிருதிவியில் புண்யகந்தமாயும் அக்னியில் தேஜஸ்ஸாகவும் எறும்பு முதலான ஸகலப்ராணிகளுக்கும் ஜீவனஹேதுவாகவும் விஸ்வாமித்ரர் முதலான தபஸ்விகளுடைய தபஸ்சக்தியாகவும்: பலவான்களுடைய காமராகசம்பந்த மில்லாத பலமாகவும் இருக்கிறேன். ஸர்வமும் ஸத்வ, ரஜஸ்தமோ குணங்களுடைய விகாரம்தான் அவைகள் என்னிடமிருக்கின்றன. ஆனால் நான் அதற்கு வசப்படுகிறதில்லை. ஜகத்பூராவும் என் மாயைக்கு வசப்பட்டிருக்கிறது. ஸ்வரூபமில்லாத மாயையால் எல்லா ஜனங்களும் மோஹிக்கிறார்கள். அதைத் தாண்டிப்போவது ரொம்பவும் கஷ்டம். ஆனால் என்னை சரணமாக அடையும் பக்ஷத்தில் அதைத்தாண்டலாம். "माया ह्येषा मया सृष्टा यन्मां पश्यसि नारद। न मांदुष्कृतिनो मूढाः"
என்னை பஜிக்காதவன் மஹாபாபி. கஷ்டத்தை மேன்மேலும் அடைகிறான். 4பேர்கள் என்னை பஜிக்கிறார்கள். அவர்கள்தான் சுகிர்திகள். கஜேந்திரன் துரௌபதி முதலியவர்கள் ஆர்த்தர்களாயிருந்து கொண்டு ஈச்வரனை பஜிக்கிறார்கள். நாம் த்ரிகரண சுத்தியுடன் ஈவரனை பஜித்தால் நமக்கு அவசியம் சிரேயஸ் கிடைக்கும். அர்ஜுனன் ஜிக்ஞாசு. சுகர்முதலியவர்கள் ஞானிகள். குசேலர் அர்த்தார்த்தி. இந்த 4பேர்களும் உத்கிருஷ்டர்கள். ஞானி. என் ஸ்வரூபம். இவ்விதம் நாமும் ஈச்வரனை பஜித்து கிருதார்த்தளாக வேண்டுமென்று ஈச்வரனை பிரார்த்திக்கிறேன்.

ஹிந்துமஹா ஸபையும் ஸநாதநிகளும்.

இந்தியாவில் மிகுந்த செல்வாக்கோடு விளங்கிய நம் காங்கிரஸ் ஸபை ஹிந்துக்களின் ஸமூஹ வாழ்விற்கும் மத நம்பிக்கைக்கும் மிகுந்த த்ரோஹத்தை செய்துவிட்டது. சுயமரியாதையும் உண்மைதேசாபிமானமுமுள்ள நாம் சந்தர்ப்பங்களில் அதைகண்டிக்கவேண்டியதவச்யம். ஹிந்து மஹாஸபையும் இந்த கோஷ்டியில் கண்டிக்கப்பட வேண்டியதுதானா என்பதே இப்பொழுதுள்ள பிரச்னை. ஹிந்துமஹா ஸபை ஹிந்துக்களின் ஸமூஹ உரிமைக்காக போராடும்ஸ்தாபனம். அதில் பௌத்தர், ஜைனர், வைதிகர், தாந்திரிகர்கள் சீர்திருத்தக்காரர்கள் போன்ற பலவித நம்பிக்கையுள்ளவர்களும் இருக்கிறார்கள். ஹிந்துமத நாகரீகம் கல்வி இவைகளில் இந்த ஸபையை சேர்ந்தவர்களுக்கு ச்ரத்தையும் நம்பிக்கையும் உண்டு.

இங்கிலையில் காங்கிரஸைக் கண்டிப்பது போலவே இதையும் கண்டிக்கவேண்டிய தவச்யமா? யுக்தமானதா? என்பதை கவனிக்கவேண்டும். முக்யமாக நாம் காங்கிரஸைக்கண்டிக்க இரண்டு காரணம். ஒன்று ஹிந்து ஸமூகத்தின் நன்மையையும் நலன்களையும் காங்கிரஸ் அனாவச்யமாக தியாகம் செய்கிறதென்பது. இந்தக்குற்றம் இந்து மஹா ஸபையில் இருக்கக் காரணமில்லை. ஹிந்துக்களின் ஸமூஹ நன்மைக்கு ஹிந்து மஹாஸபை பாடுபடுகிறது. மேலும் காங்கிரஸ் தனது பலம் முழுவதையும் இந்துசமூகத்தின் எதிரிகளுக்கு அளித்து அதனால் ஹிந்துக்கள் ஹிம்ஸை படும் காலத்தில் காங்கிரஸ் போல் வலுவுள்ளதாகவும் செல்வாக்குள்ளதாகவுமுள்ள ஹிந்து மஹா ஸபை ஒன்றே புகலிடமாகக் காணப்படுகிறது.

மதவிஷயங்களிலும் ஆசார விஷயங்களிலும் அபிப்ராயபேதமேற்படுமென்பது ஹிந்து மதத்திற்கு வெகு ஸகஜமானது. ஸமயாசாரங்களையும் தேசாசாரங்களையும் எடுத்தால் ஒன்றுக்கொன்று ஒவ்வாத பல ஆசாரங்களிருக்கிறது என்பது தெளிவாகும். ஒருவன் தனக்கு இருக்கும் ஆசாரத்தில் நம்பிக்கை குறைந்து அவன் வேறு வழியில் ஆரம்பித்தால் அவனைப்பற்றிகவலை இல்லை. அப்படிச்சென்றவன் தன்னுடைய எண்ணங்களை பிறர் மீது சுமத்த ஆரம்பித்தால் அது அநாகரீகமென்றும் அனியாயமானதென்றும் கண்டிக்க வேண்டியது அவச்யம். காங்கிரஸ் பிரஜா உரிமையைப் பலமாகப் பேசி வருகிறது. ஆனால் அதே வேஷத்தில் அதிலுள்ள சீர்திருத்தவாதிகள் தங்களுக்குப்பிடித்த சீர்திருத்தத்தை ஜனங்கள் மீது சட்டத்தின் மூலமாக பலாத்காரமாக சுமத்துகிறார்கள். காங்கிரஸைக்கண்டிப்பதற்கு இது இரண்டாவது காரணம். பேச்சு ஸ்வதந்திரம் போல் மதஸ்வதந்திரமும் வேண்டாமா? ஹிந்து மஹா ஸபையில் மத சீர்திருத்தங்களை சட்ட மூலமாக நிறைவேற்றவேண்டுமென்று யாரும் முயற்சித்ததாகத் தெரியவில்லை. ஹிந்து மஹா ஸபைகாரர்களும் ஒரு முக்கியமான விஷயத்தை கவனிக்க வேண்டும். ஆசாரங்களில் மாறுதல் வேண்டுமென்று சொல்பவர்களை நாங்கள் நிர்ப்பந்திக்க வில்லை.

ஆனால் கோடானு கோடி வருடங்களாக இந்த தேசத்தில் இருந்து வந்துள்ள ஆசாரங்களில் பலர் மாறுதல்களை விரும்பாதிருக்கிறார்கள். அவர்களும் மிகுந்த மேதாவிகளும் ஸமூக அபிமானிகளுமே. அவர்களை திடீரென்று பல வந்தப்படுத்துவது நியாயமானதாகாது. வியாஸர் முதல் இன்றுள்ள பண்டிதர் வரை வந்துள்ள ஆசாரங்களை சட்டத்தின் மூலமாக பலாத்காரமாக குலைக்க நினைப்பது தர்மமாகாது. அவைகளுடைய தத்துவங்களில் பூர்ணமான நம்பிக்கையுள்ள மேதாவிகள் பலர் இருக்கும் வரை அந்த ஆசாரங்களை சட்ட மூலம் மாற்ற முயற்சிப்பது விவேககரமானதில்லை.

ஹிந்துமஹா ஸபையினுடைய தலைவர்களில் பலர் மதச் சீர்திருத்தங்களில் சட்டம் போன்ற பலாத்காரங்களை கையாளக்கூடாது என்று பஹிரங்கமாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே இது விஷயத்தில் காங்கிரஸை கண்டிக்க வேண்டிய அவசியமும், நியாயமும் இருப்பதுபோல் ஹிந்துமஹா ஸபை விஷயத்தில் இல்லை. மதுரையில் கூடிய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தார் ஹிந்துமஹா ஸபையை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். அவர்கள் ஹிந்துமஹா ஸபையை காங்கிரஸை போல் கண்டிக்க வேண்டிய அவசியமுண்டா? என்பதை மறுபடி ஒரு முறை ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பிரசாரக் கூட்டங்களிலோ, ஸம்மேளனங்களிலோ காங்கிரஸைக் கண்டிப்பது போல் ஹிந்துமஹா ஸபையைக் கண்டிக்காமலிருப்பதே நலமென்று நமது அபிப்பிராயம்.

ஓர் ஸநாதநி

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-௵ புரட்டாசி-௴ 11௳

சாச்வதமான சாந்திக்கு வழியென்ன?

தற்போது ஐரோப்பாவில் நடந்துவரும் கோரயுத்தமானது நாளுக்கு நாள் அபாய நிலைமையை அடைந்து வருகிறது. அதர்மமான, காம, க்ரோதங்களை அடிப்படையாகக் கொண்டு மனிதவர்க்கத்தையே அழித்து விடும் தன்மை வாய்ந்ததாயிருக்கிறது. விக்ஞானப்பயிற்சியின் விபரீத பிரயோகங்களால் அடுத்த நிமிஷம் என்ன ஆபத்து நேருமோ என்ற சிந்தையால் எவரும் சாந்தியுடன் வாழ இடமில்லாமற் போய்விட்டது, கணக்கற்ற நிரபராதிகளான ஸ்திரீ புருஷர்களும் குழந்தைகளும் வதம் செய்யப்படுகிறார்கள். மிக்கரமணீயமாக அமைந்துள்ள மாடமாளிகைகளும் அரண்மனைகளும் ஏழைகளின் வாஸஸ்தலங்களும் ஈவு இரக்கமின்றித்வம்ஸம் செய்யப்படுகின்றன. இந்தக்கோரமான அதர்மமான படுகொலையானது உலகத்தினரை ஆழ்ந்த சிந்தையில்அழுத்தியிருக்கிறது. தட்டுத்தடையின்றி கட்டுக்கடங்காமல் செய்யப்படும் இந்த அக்கிரமங்களை முடிவுக்குக் கொண்டு வரவழி யென்ன? மனிதஆசையை நியாயமானவறையறைக்குட்படுத்தி உலகில் சாச்வதமாக சாந்தியை நிலைநிறுத்த என்ன உபாய மிருக்கிறது? இப்போது மனுஷ்ய வர்க்கம் அடைந்துள்ள நிர்கதியான நிலைமையில் யாவரும் இதைத்தான் சிந்திக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

ஆனால் ஐரோப்பாவிலுள்ள புத்திமான்களுக்கு இன்னும் இந்த சாந்தமான வழியில் புத்தி செல்லுவதாகத் தெரியவில்லை. இன்னும் அதர்ம மூலமான, காம, க்ரோதாதிகளை விருத்தி செய்யவும், அதன் மூலம் மனிதவர்க்கத்சில் அமைதியின்மையை உண்டுபண்ணவுமே அவர்களுடைய புத்தி சக்தி உபயோகிக்கப்படுகிறது. ஸமீபத்தில் மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் வெளியிட்டுள்ள ஒரு அபிப்பிராயமே இதை ஊர்ஜிதம் செய்வதாயிருக்கிறது.

இப்போது ஐரோப்பாவில் விமானங்களின் உபத்திரவம் காரணமாக பிரஜைகள் பூமியில் வஸிக்க அச்சம் கொள்ள வேண்டிய நிலைக்கு வந்துவிட்டார்கள். விமான வெடிகுண்டு காரணமாக பூமியின் கீழ் பிரதேசங்களில்வாழ்க்கை நடத்தலாமாவென்ற யோஜனை தோன்றியிருக்கிறது. மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் சொல்லுவதென்னவென்றால் இங்கிலாந்தில் இனி பாதாள உலக வாழ்க்கையையே விருத்தி செய்ய திட்டம் போட வேண்டுமென்பது தான். பூமியின் கீழ் மிக்க ஆழமான முறையில் சுரங்கங்களைக் கற்பித்து பற்பல தொழிற் சாலைகளையும், ஆயுதம், வெடிமருந்து முதலிய உத்பதிகளையும் இனி பூமியின் கீழிருந்து செய்துகொண்டு சத்ருக்களை பலமாக எதிர்க்கவேண்டுமென்கிறார். பூமிக்கு மேல் பிரதேசங்களில் மேற்படிக் காரியங்களைச் செய்தால் எதிரி விமானங்கள் அவைகளை அழித்துவிடக் கூடிய கஷ்டமிருப்பதாயும் லாயிட் ஜார்ஜ் சொல்லுகிறார்.

இப்படி பாதாள உலக ஸிருஷ்டி செய்தும், ஜனங்களின் வாழ்க்கை முறைகளை மாற்றியும் சத்ருவை முறியடிக்க வேண்டுமென்ற எண்ணம் ஒரு விதத்தில் உசிதமாயிருப்பினும் இது வாழ்க்கையில் சாச்வதமான சாந்திக்கு வழி செய்வதாகுமா? தற்போது ஏற்பட்டுள்ள, காம, க்ரோத மூலமான வேற்றுமைகளை அகற்றி சாச்வதமான சாந்தியேற்பட வழியென்ன வென்பதை மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் போன்றவர்கள் கண்டுபிடிக்க வேண்டியதே முக்ய விஷயமென்று நினைக்கிறோம். அப்படிப் பார்த்தால் மனிதவர்க்கத்தின் அமைதியான வாழ்க்கைக்கு எல்லாரும் கட்டுப்படக் கூடிய உபாயமொன்று தானிருக்கிறது. அது தான், தர்மமென்கிற உபாயமாகும் அதுவே காம க்ரோதாதிகள் மூலம் ஸமூஹத்தில் ஏற்படக் கூடிய நிலைமையை ஸமாளிக்கக் கூடியதென்பது இந்த யுத்தத்தாலும் நிரூபணமாகிவிட்டது. ஐரோப்பாவில் பரவியுள்ள பலாத்காரச்செயல்களுக்கு அங்கு மததர்ம நம்பிக்கை பாழாகிவிட்டதே காரணமென்று சில வருஷங்களுக்கு முன் லார்டு லோதியன் கூறினார். இன்றும் பல மேதாவிகளும் இதையேசொல்லி யிருக்கிறார்கள்.

ஆதலால் தர்ம மூலமான வ்யவஸ்தையை வலுப்படுத்தி அதன் மூலம் பிரஜைகளின் எல்லாவிததீமைகளையும் தடுக்கப் பார்ப்பதே சாச்வத சாந்திக்கு வழியாகும்.

"அதர்மத்தினால் மனிதன் விருத்தியடைவது போல் தோன்றலாம். அதனால் அவன் க்ஷேமங்களைப் பெறுவது போலும் தோன்றலாம். சத்ருக்களை ஜயிக்லாம்: ஆனால் அவன்கடைசியில் வேருடன் வீழ்ந்து மாய்வது நிச்சய, மென்று மனுகூறுகிறார்.

அதர்மத்தை அடிப்படையாகக் கொண்ட ராவண துர்யோதனாதிகளின் சரித்திரமே மேற்கண்ட மனு வாக்கியத்திற்குப் போதிய உதாரணங்களாகும். தர்மவிருத்தமான அர்த்த, காமங்களைப்பெற அவர்கள் தங்களது சக்தியனைத்தையும் உபயோகித்தும் பலன் விபரீதமாகிவிட்டது. உலகம் நிலைப்பது தர்ம மூலமென்ற தத்வத்தை அவர்கள் மறந்தார்கள். அல்லது அலக்ஷ்யம் செய்தார்கள். மனிதசக்தியையே பெரிதாகமதித்தார்கள்.

ஆதலால் லாயிட் ஜார்ஜ்போன்ற மேதாவிகள் தற்கால சாந்தியான யோஜனைகளைவிட சாச்வதமான சாந்திக்கு வழியான தர்மத்தை ஜனங்களிடையில் தீவ்ரமாக பிரசாரம் நடத்திப்பலன் பெறலாமென நினைக்கிறோம் அப்போதுதான், மனிதவர்க்கத்தில் உயர்ந்த க்ஷேமங்களும் அழிவற்ற அமைதியும் ஏற்பட்டு தற்காலக் கஷ்டங்கள் தானாகவே தீர வழியேற்பட்டு விடும்.

ஹிட்லர் கொள்கைக்கு காங்கிரஸ் ஆதரவா?

எம். என். ராய் கண்டனம்.

புதிய மந்திரி ஸபைகள் வேண்டும்.

பம்பாயில் அகில இந்தியக்கமிட்டி செய்த தீர்மானத்தைப்பற்றி ஸ்ரீமான் எம். என். ராய் வெகுபலமாகக் கண்டித்து அறிக்கையொன்று வெளியிட்டிருக்கிறார். அதில் அவர், யுத்த எதிர்ப்பு விஷயமாக காங்கிரஸ் கொண்டுள்ள விபரீத மனோபாவமானது, ஹிட்லருடைய கொள்கையை அதாவது பாஸிஸத்தை ஆதரிப்பதாக இருக்கிறதென்றும், இந்த தீர்மானம் பிரிட்டனை தொந்திரவு செய்யக்கூடியதென்றும், இது பலிக்காதென்றும், இது ஜனநாயகத்திற்கும் துரோஹமிழைப்பதாயிருப்பதாயும் இதனால் காங்கிரஸே அழிந்து போகநேருமென்றும், சொல்லியிருக்கிறார்.

இச்சமயம் மற்ற எல்லா ராஜ்யவாதிகளும் சேர்ந்து காங்கிரஸை விலக்கி புதிய மந்திரி ஸபைகளை மாகாணங்களில் ஏற்படுத்தி யுத்தத்தில் பிரிட்டனுக்கு உதவி புரியவேண்டுமென்றும் காங்கிரஸ் சட்ட ஸபைமெம்பர்களாயிருப்பவர்கள் கூட இதைப்பற்றி யோஜிப்பது நலமென்றும் கூறுகிறார்.

கடன் நிவாரணச்சட்டம் செல்லுமா?

பெடரல் கோர்ட்டில் அப்பீல்

அக்டோபர் 16௳ விசாரணை

சென்னையில் காங்கிரஸ் மந்திரி ஸபை செய்த கடன் நிவாரணச்சட்டமானது செல்லுபடியுள்ளது தானென்று ஹைகோர்ட் செய்த தீர்ப்பின்மேல் பெடரல் கோர்ட்டிற்கு வாதிகள் அப்பீல் செய்திருக்கிறார்கள். சட்டம் செல்லாதென்பது கக்ஷி. அக்டோபர்மீ 16௳ யன்று இது விசாரணைக்கு வருகிறது. சென்னை கவர்ன்மெண்ட் தரப்பில் அட்வகேட் ஜனரல். ஸர் அல்லாடி ஆஜராவாராம் வாதிகளுக்கு மாஜிநிர்வாஹ ஸபை மெம்பரான ஸர். பி. எல். மித்ரர் ஆஜராவார். இந்தக்கேஸின் முடிவு தென்னிந்தியர்களால் ஆவலுடன் எதிர்பார்க்கப் படுகிறது.

பாகிஸ்தான், பேச்சுக்கு இடம் கொடுக்க மாட்டோம்

ஹிந்து மஹாஸபை நிபந்தனைகள்

வைஸ்ராயிக்குப் பதில்

டாக்டர் மூஞ்ஜே வைஸ்ராயைப் பேட்டி கண்ட பிறகு ஹிந்து மஹாஸபையின் காரியக்கமிட்டிக்கூட்டமானது பம்பாயில் 22௳ நடை பெற்றது. நிர்வாஹ ஸபை விஸ்தரிப்பு ஸம்பந்தமாக முஸ்லீம்லீக் விதித்துள்ள நிபந்தனைகளைப்பற்றியோஜித்ததுடன் ஹிந்து மஹாஸபை வெளியிட வேண்டிய நிபந்தனைகளும் யோஜிக்கப் பட்டன.

பாகிஸ்தான் திட்டத்தை நிராகரிப்பதாக கவர்ன்மெண்டார் உறுதி கூறவேண்டுமென்றும், நிர்வாஹ ஸபையில் ஹிந்துக்களுக்கு 6 ஸ்தானங்களும், யுத்த ஸபையில் 15 ஸ்தானங்களும் கொடுக்க வேணுமென்றும் வேறுபல நிபந்தனைகளையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

மதுரையில் ஆஸ்திக ஸ்திரீகள் மஹாநாடு.

மதுரை டவுன் ஆஸ்திக ஸ்திரீ சங்கத்தின் ஆதரவில் மதுரை, ராமனுதபுரம், திருச்சி, தஞ்சை ஆஸ்திக ஸ்திரீகளின் 1வது மகாநாடு ஸனுதன தர்ம வித்யாலயத்தில் 21உயன்று நடைபெற்றது. உள்ளூர் வெளியூர் ஸ்திரீகள் ஏராளமாகக்கூடியிருந்தார்கள்.

சங்கத்தின் முதலாவது ஆண்டு விழா வைத்திறந்துவைத்து ஸ்ரீமதி செல்லம்மாள் கீழ்கண்டவாறு ஓர் சொற்பொழிவு ஆற்றினுர்கள்.

ஸ்ரீயப்பதியான ஸ்ரீமந்நாருயணனுல் ஆதியில் மச்சாவதாரம் செய்யப்பெற்றதும், பரமேஸ்வரனுல் அறுபத்தினன்கு திருவிளையாடல்கள் நடத்தி காண்பித்ததும் கருதரிய கடலாடை உலகுபல அண்டம் கருப்பமாய் பெற்ற கன்னியான பராசக்தி மனிதவடிவுன் மலையத்வஜபாண்டியன் புத்திரியாய்ப் பிறந்து அரசாட்சி செய்தருளியதும், ஒப்பற்ற வைதிக மதங்களுள் சைவ வைணவ இருமதங்களும் தழைத்து ஓங்கியதும் கல்வியின் சிறப்பென்னும் ஆர்வத்தால் தெய்வங்களே புலவர்களுடன் சரி ஆசனித்திலிருந்து சங்கம் நடத்தினதும் மஹாபுருஷர்களாலன்றி ஸ்தோத்தரிக்க முடியாத இக்கடம்பவன க்ஷேத்ரத்தின் நடுநாயகமாக விளங்கும் இம்மதுரைமாநகரின் பெருமையை ஒரு பேதமை மிகுந்த ஸ்த்ரீஜாதியானநான் எவ்வாறு தெரிந்து சொல்லவல்லேன். மதவிஷயங்களில் பலவிதங்களாலும் சட்டத்தின் பேராலும் சமீபத்தில் சொற்பகாலம் மந்திரி பதவியிலிருந்து பதவி இழந்தவர்களால் நடத்தப்பட்ட மகா கொடுமைகளை நாம் அடைந்து துன்புற்றுத்தவிக்கும் சமயத்தில் அன்புப்பணி செய்ய வேண்டிய ஈஸ்வரனுல் அனுப்பப்பட்டு நான் இம்மதுரையில் வாழ்ந்து வருகிறேன் என்று அளவிட்டுச் சொல்லமுடியாத பல நன்மைகளை செல்வத்தாலும் சரீரத்தாலும் அகில இந்தியாவிலுள்ள பல ஆஸ்திகர்களுக்கும் நன்மையைச் செய்து கொண்டேயிருக்கும் நம் தலைவரின் ஒரு உத்திரவின் கீழ் இவ்வன்புப் பணியைத் தெய்வானுக்ரஹமென்று நான் ஏற்று, இம்மாதர்களின் மகாநாட்டுத்திறப்பு விழாவை நடத்திக் கொடுக்கிறேன். இத்துடன் பலதுன்பங்களை அனுபவித்தும் சலியாது மனமுடைய இம்மதுரை வாசிகளான உங்களுக்கும் பல ஊர்களிலிருந்து மிக்க சிரமப்பட்டு மதுரையின் இன்பமோ துன்பமோ உங்களிலும் எங்களுக்கே அதிகமாக உரியதென்று உரிமை பாராட்டி இங்கு வந்து குழுமியிருக்கும் அன்புமிக்கச் சகோதரிகளுக்கெல்லாம் என் மனமார்ந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மகாநாடு இறைவன் திருவருளால் இனிது நடந்து மேன்மேலும் நன்மையை அடையும் என்று நாம் எல்லோரும் நம்புவோம். ஆதிமுதல்வனின் அடிகளுக்கு நம் உற்ருதயம் அடைவிடமாகுக, அருளுவாளுக.

கும்பகோணம் சம்பகத்தம்மாள் அக்ராஸனம் வகித்தார். தேனிக்குளம் ஸ்ரீ மதி ராஜம்மாள் கொடியேற்றி வைத்தார். வரவேற்புக்கமிட்டித்தலைவியான ஸ்ரீமதி சேஷலக்ஷ்மி அம்மாள் தமது வரவேற்பு பிரஸங்கத்தைச் செய்து பிரதிநிதிகளை வரவேற்ருர். மஹாநாட்டு தலைவிக்கு ஓர் உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது.

தலைவர் தமது பிரஸங்கத்தில் ஐரோப்பிய யுத்தத்தைப் பிரஸ்தாபித்தும், இந்திய ராஜ்ய நெருக்கடியை குறிப்பிட்டும், வர்ணுச்ரம முறையே உலகத்தின் ஸமாதானத்திற்கு ஏற்றதென்றும், அதுவே உயர்ந்ததென்றும், இப்போது அதை பிரசாரம் செய்ய சரியான ஸந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பதாயும், குறிப்பிட்டு ஆலயப்பிரவேசச் சட்டம், சாரதாச் சட்டம் ஆகியவைகளைக் கண்டித்தார். ஸ்திரீகள் ஒற்றுமையுடன் தர்மரக்ஷண கைங்கரியத்தில் இடுபட வேணு மென்றும் வற்புறுத்தினுர்.

காலஞ் சென்ற மைஸூர் மஹாராஜாவிடம் அநுதாபம் காட்டியும், புதிய அரசருக்கு வாழ்த்துக்கூறியும், யுத்தத்தில் பிரிட்டன் ஜயிக்க வேண்டியும் அதற்கு உதவி புரிய வேண்டியது அவச்யமென்றும், காங்கிரஸ் ஹிந்து மஹாஸபை இரண்டும் வர்ணுச்ரம தர்மவிரோதியாகையால் ஸனுதநிகள் அவைகளை ஆதரிக்கக்கூடாதென்றும், ஸனுதநிகளைக் கலக்காமல் எவ்வித ராஜியமாறுதலும் செய்யக்கூடாதென்றும் ஆலயபிரவேச சட்டத்தை ரத்து செய்ய வேணுமென்றும் பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

ஸ்ரீமதிகள் மதுரைவல்லி, ரங்கம்மாள், வெங்கடம்மாள், சேஷம்மாள் முதலியவர்களும் பேசினுர்கள்.

ஸ்ரீமதி சேஷம்மாளால் யாவருக்கும் உபசார வார்த்தை கூறப்பட்டபின் மஹாநாடு கலைந்தது.

வெங்கடரமண ஆயுர்வேத ஆஸ்பத்திரி.

மைலாப்பூர்

ஷை ஆஸ்பத்திரியின் 34-வது வருஷ (1939–40)த்திய ரிபோர்ட் வரப்பெற்ருேம்.

சென்ற கணக்கிற்குள்பட்ட வருஷத்தில் 66,249 வியாதிஸ்தர்கள் வரை கவனிக்கப் பட்டுள்ளார்கள். போன வருஷத்திய நோயாளி புஸ்தகத்தில் 60,808 பேர்கள் வரைதான் பதிவாகி இருக்கின்ருர்கள்.

1939 ஹு அக்டோபர் மீ 22உ மாயவரத்தில் இவ்வாஸ்பத்திரியின் கிளை ஆபீஸ் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதில் 1566 பேர்கள் வரை சொஸ்தப்படுத்தப் பட்டுள்ளார்கள்.

மருந்து விற்றதினுல் ரூ 11647—0—8 பையும், வட்டி முதலியவைகளால் ரூ 6996—7—8 பையும். மதராஸ் கார்ப்பரேஷன் நன்கொடை ரூ 378—0—0ம், பிரைஸுகள் வகையரு ரூ 30ம், சில்லரை வரவுகளில் ரூ 32—0—4 ம் வந்திருக்கின்றது.

இவ்வாஸ்பத்திரி நன்ருக நடந்துவருவது யாவரும் அறிந்தவிஷயம்.

அகில இந்திய வர்ணுச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

மதுரைக் கிளையின் மஹாநாடு

ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி ஞாயிற்றுக்கிழமை அன்று மதுரை ஸனுதன தர்ம வித்யாலயத்தில், வர்ணுச்ரம மஹாநாடு செவ்வனே நடைபெற்றது. சென்னை ஸ்ரீமான கோகுலதாஸ் அவர்கள் தலைமை வகித்தார். ராவ்ஸாஹிப் ஸ்ரீமான் கதிர்வேல் பிள்ளை அவர்கள் பிரதிநிதிகளை வரவேற்றுச் சிறந்த பிரஸங்கம் செய்தார். தலைவரின் உபன்னியாஸத்திற்குப் பிறகு முக்யமான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. விவரங்கள்கிடைத்ததும் பிரசுரிக்கப்படும்.

ஆலயபிரவேசம் செய்ய அதிகாரம் இல்லை

டிரஸ்டிகளான நாடார்கள்மீது தடை யுத்தரவு

புலிவலம் கோவில் வழக்கு

திருவாருக்கு ஸமீபமாயுள்ள புலிவலத்திலிருக்கும் ஸ்ரீ தக்ஷிண கோகர்ணேச்வரர், ஸ்ரீ வெங்கடாசலபதி ஆகிய தேவாலயங்களுக்கு ஸ்ரீமான் ராமஸாமி நாடார் முதலிய 3 நாடார் வகுப்பினரை டிரஸ்டிகளாக எண்டோமெண்ட் போர்டார் நியமித்தார்கள். அந்தநாடார்கள் தேவாலயங்களுக்குள் பிரவேசிப்பது கூடாதென்றும் சாஸ்திரத்திற்கு, கோவிலின் நீண்டகால வழக்கத்திற்கும் அநுஸரணையாக மேற்படியார்களை கோவிலில் பிரவேசிக்க விடக்கூடாதென்று ஓர் வழக்கு ஸேவார்த்திகளால் கொடுத்து விசாரணையிலிருந்து வருகிறது.

ஷை கேஸின் வாதிகள் அந்த நாடார்கள் மீது தாத்காலிகத்தடை யுத்தரவு பிறப்பித்து கேஸ் முடிவாகும் வரையில் அவர்கள் ஆலயத்திற்குள் பிரவேசிக்காமல் தடுக்க வேண்டுமென்று கோரியிருந்தார்கள்.

இந்த மனுவின் மீது இருதரப்பிலும் ஏராளமான பிராமணப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இரு தரப்பு வாதங்களையும் கேட்டபிறகு ஜில்லா முன்சீப் ஸ்ரீமான் சிவராவ் அவர்கள் ஆலயப்பிரவேசம் செய்ய கூடாதென்று நாடார் மீது தடையுத்தரவு பிறபித்துள்ளார் மாகாணம் முழுவதுமுள்ள வழக்கமானது நாடார்ஸமூகத்தினர் கோவில் பிரவேசத்திற்கு எதிராக இருப்பதாயும், சாஸ்திரங்களும் பிராசீன வழக்கமும் தங்களுக்கு ஆதாரமாயிருப்பதாக வாதிகள் கூறுகிருர்களென்றும், புதிய ஆலயபிரவேச சட்டத்தின் படியும் இந்த நாடார்கள் பிரவேசிக்க இடமேற்படவில்லையென்றும், மதஸ்தாபன போர்டர் இவர்களைடிரஸ்டிகளாக நியமித்ததைக் கொண்டு மாத்திரம் ஆலயப்பிரவேச பாத்யம் ஸித்தித்து விடாதென்றும், பிரதிவாதிகள் தங்களுக்கு ஆலயபிரவேச வழக்கமிருப்பதாக கூறுவது ஒப்புக்கொள்ளத் தக்கதில்லையென்றும் வேறுபல விஷயங்களையும் முன்ஸீப்தமது தீர்ப்பில்குறிப்பிட்டுள்ளார்.

அத்வைத ஸபை அனந்தப்பூர்

யுத்தத்தில் பிரிட்டன் வெற்றிபெறவேண்டியதற்காக பிரார்த்தனை நடத்தும்படி வைஸ்ராய்கேட்டுகொண்டதை அநுசரித்து அனந்தப்பூர் அத்வைதஸபையின் ஆதரவில் 8-உயன்று தேவி சன்னதியில் பிரார்த்தனை நடத்தப்பட்டது.

ஸனுதன தர்மத்தை கவர்மெண்டார் பாதுகாக்க வேண்டுமென்றும், சட்டப்புஸ்தகத்திலிருந்து ஆலயப்பிரவேச சட்டத்தையும் சாரதா சட்டத்தையும் ரத்து செய்துவிடவேணுமென்றும் அசுத்தமாக்கப்பட்ட கோவில்களில் ஸம்ப்ரோக்ஷணை நடத்தி அவைகளில் ஸனுதனிகள் ஸ்வாமி தரிசனம் செய்யும்படியான நிலைமையை உண்டுபண்ணவேண்டுமென்றும் ஸ்ரீதேவியிடம் பிரார்த்திக்கப்பட்டது.

மதிப்புரை.

ஸௌதாமினி.

இயற்றியவர்:- திவான்பஹதூர் K. S. ராமஸாமி சாஸ்திரிகள் ரிடையர்ட் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ்.

(கிடைக்குமிடம்) ஆசிரியர் 47 லாயிட்ஸ் ரோட் ராயப்பேட்டை மதருஸ்.

ஸௌதாமினி என்ற இப்புத்தகம் ஸமூக சீர்திருத்த சம்பந்தமான ஒரு நாடகத்தை வெளியிடுகிறது. இது ஐந்து அங்கங்களுள்ளது. மிகப்பிரஸித்தரான இந்த நாடகத்தின் ஆசிரியரைப்பற்றி நாம் தெரிவிக்க வேண்டிய தொன்றுமில்லை. ஸமூகத்தின் ஒப்புயர்வற்ற தலைவரும் ஆங்கிலம் ஸம்ஸ்கிருதம் இவைகளில் மிகுந்த ஆராய்ச்சி நிறைந்த படிப்புள்ள இப்பெரியார் ஸமூகத்தில் இருந்துவரும் நிலையைக்கண்டு மனம் நொந்து அதை நன்கு திருத்துவதற்காக இந்த நாடகத்தை இயற்றியிருக்கிறார். முக்கியமாக இந்த நாடகம் வரதக்ஷிணை என்ற கொடுமை எப்படி நமது ஸமூஹத்தின் ஆணிவேரை அறுத்து வருகிறது, இந்த வரதக்ஷிணை பேயால் குடும்பங்கள் எப்படி அழிகிறதென்றும் பெண்கள் இதன்காரணமாகவாழ்க்கையில் எப்படி வெறுப்புக்கொள்கிறார்கள் என்றும் கண்ணாடிபோல் இந்த நாடகம் நன்கு நிரூபிக்கிறது. வாழ்க்கையில் நீண்ட ஆழ்ந்த அனுபவமுள்ள இந்த ஆசிரியர் மிகவும் உயர்ந்தஸ்திதியிலேயேஸமூகத்தின் தற்கால நிலையை இதில் விளக்குகிறார். ஸமூகத்தின் நன்மையில் சிரத்தையுள்ள யாரும் இந்த நாடகத்தை வாங்கிப்படிக்க வேண்டியதவச்யம்.

மேலும் இந்த நாடகத்தில் இதன் ஆசிரியர் நவீன ஸமூக அமைப்பின் போக்கை மிக்க அழகாக வர்ணித்திருக்கிறார். இதை யாரும் கவனிக்கவேண்டியதவச்யம். முதல் அங்கம் முதல் காக்ஷியில் ஸௌதாமினிக்கும் காதம்பனிக்கும் நடக்கும் சம்பாஷணை நமதுதேசத்திலுள்ள பெண்மணிகள் ஆங்கிலப்படிப்பின் உதவி யில்லாமலேயே பிராசீன ஸம்பிரதாயத்தில் பக்தியோடும் எவ்விதம் மிகுந்த மேதாவிகளாக விளங்குகிறார்களென்பதை நன்கு எடுத்துக்காட்டபடுகிறது. நான்காவது அங்கம் இரண்டாவது காக்ஷியில் மோஹன் என்பவனின் ஆங்கிலஸம்சாரமான ரோஸ் என்பவளுக்கு முன் காதம்பனியும் ஸௌதாமினியும் காதல் நிறைந்த விவாஹத்தின் தத்துவத்தை நிரூபிப்பதும் விவாஹ ரத்தை எதிர்ப்பதும் இந்தியாவில் கோடிக்கணக்கான ஸ்திரீகளின் உள்ளத்தில் ஆழ்ந்துகிடக்கும் அபிப்ராயத்தை வெளியிடுகிறது என்பதற்கு சந்தேகம் கிடையாது.

Rose Mohan என்ற ஆங்கில ஸ்திரீ குடும்ப வாழ்க்கையில் விசேஷமான பற்றுதலைத் தெரிவிப்பது விலாஸினி, தேஜோமயி தேவி போன்ற ஸ்திரீகள், விவாஹ ரத்தைப்பற்றியும், மண மறியலைப்பற்றி பேசுவதும் நமது ஸமூகத்தில் தற்காலமிருக்கும் நவீன பித்துப்பிடித்த ஸ்திரீகளின் விபரீத போக்கை நன்கு விளக்குகிறது. மோஹினி தேஜோமயி இரண்டு பேர்கள் போய் சில ஸ்திரீகள் ஸ்திரீ ஸமூகத்தின் மதிப்பைக் கெடுத்து வாழ்க்கையில் பொறுப்பில்லாமல் புரட்சி உண்டுபண்ணுகிறார்கள் என்பதும் நன்கு வெளிக்காட்டுகிறது. ஸௌதாமினிக்கு புருஷனாக விவஹிக்கப்பட்ட தநராஜ் என்பவன் விசேஷ ஆங்கிலப் படிப்புள்ளவன், வக்கீலாக இருந்து வருபவன் நவீன லோகத்தோடு விசேஷப் பழக்கமுள்ளவன். இவ்வளவு முன்னேற்றமடைந்து இருந்தும் மதன், குசேல் இவர்களோடு இரண்டாவது அங்கம் இரண்டாவது காக்ஷியிலும், நான்காவது அங்கம் முதல் காட்சியிலும் சம்பாஷிக்கும்போது வரதக்ஷிணையில் ஆசை காண்பிப்பது இன்னும் வரதக்ஷிணைக் கொடுமை ஒழியாததற்குக் காரணம் ஆங்கிலம் படித்த வாலிபர்கள் தான் என்பதை நன்கு விளக்குகிறது.

மூன்றாவது அங்கம், மூன்றாவது காக்ஷியில் தேச சேவைக்கான தேஜோமயி தேவி வரதக்ஷிணைக்காக மறியல் செய்ய நினைப்பதும் புதுமை பத்திராதிபர் சர்மா சொல்லுவதும், ஸமூஹ சீர்திருத்த வாதிகள் எப்படி பொறுப்பற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கிறது. மூன்றாவது அங்கம், மூன்றாவது காக்ஷியில் ஸமூகச் சீர்திருத்தச் சட்டம் பயன்படாதென்று நிரூபிப்பதை நாம் வரவேற்க வேண்டும்.

முக்கியமாக இந்த நாடகபாத்ரமான ஞானஸௌந்தரி பயப்படுவதுபோல் வரதக்ஷிணையால் பல குடும்பங்கள் பாழாகிவிட்டன. இது சமூகத்தில் திடீரென்று தோன்றிய தொத்து நோய். குடும்ப சொத்துக்களை விற்று வரதக்ஷிணை கொடுத்துவிட்டுபட்டிணியோடு பல குடுபங்கள் பரிதவிக்கின்றன. பெண் பிறந்து வயது ஆக, ஆக அதைப் பார்த்துப் பார்த்து, வரதக்ஷிணை காரணமாக தகப்பன் திகில்படுவதும் தகப்பன் வரதக்ஷிணைக்காக விடு வாசம் நிலம் இவைகளை விற்க ஏற்பாடு செய்வதைக் கண்டு பெண்கள் மனம் ஒடிந்து நிற்பதும் அநேகமாக ஹிந்து சமூகத்தில் பாக்கியுள்ள ஜீவனாடியை உயிரற்றதாகி விட்டது. வரதக்ஷிணை காரணமாக காதலனை சந்திக்கும் பொழுதெல்லாம் பெண்மனம் துடிக்கிறது. வாழ்க்கையை ருசியற்றதாகி விடுகிறது. இதனால் விவாஹ தத்துவமே மறைய ஆரம்பித்துவிட்டது. இந்தக்கொடுமை சமூகத்திலிருந்து நீக்கப்படாவிட்டால் ஹிந்து நாகரீகம் ஸமூகம் இவைகள் வெகுசீக்கிரத்தில் அழிந்துவிடும் என்பதை பற்றி சந்தேகமே இல்லை.

பிள்ளைகளை ஆங்கிலம் படிக்கவைத்து நிலம் வீடுகளை விற்று தாய் தகப்பன்மார்கள் பணத்தாசைபிடித்து வரதக்ஷிணை கேட்பது சகஜம். ஆனால் நவீனநாகரீகத்தில் உழன்று மேல்நாட்டிலேயே பிறந்து வளருவதாயும் சொப்பனம் காணும் ஆங்கிலம் படித்த நவீன யுவர்கள் இந்த அக்கிரமத்திற்கு ஏன் உடங்யையாயிருக்கிறாரோ தெரியவில்லை அவர்களையும் அவர்கள் போன்ற வரதக்ஷிணைபேய் பிடித்தவர்களையும் தெளிவிக்க இந்த நாடகம் மிகவும் உதவும். ஆகவே இதை நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். அ-ரா

விழுப்புரம்.

கீதா உபந்நியாஸம்.

இவ்வூர் வேதபாடசாலையின் ஆதரவில் ஷை பாடசாலையின் கார்யதர்சி. லோகோ ஆபீஸ் அக்கௌண்டெண்ட் ஸ்ரீ ராகவ அய்யங்கார் அவர்கள் க்ருஹத்தில் 22-9-40 ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிமுதல் 10½ வரையில் திருநெல்வேலி. அட்வகேட், பிரம்மஸ்ரீ ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள் ஸ்ரீ பகவத் கீதையைப்பற்றி உபந்யஸித்தார். பாமரர்களுக்கும் ஸந்தேகமில்லாமல் தெரியும் படியாய் ஸுலபமான த்ருஷ்டாந்தங்களுடன் உபன்யஸித்தார்கள் ஷை வேதபாடசாலையின் உபாத்யாயர் ஸ்ரீ N. B நாராயணசாஸ்திரிகளின் வேண்டுகோளுக்கிணங்கிவந்து உபன்யஸித்தது விசேஷமாகும். (ந-நி)

வைதிக ஸமாஜம்

கும்பகோணம்.

கும்பகோணம் வைதிக ஸமாஜம். சில ஆண்டுகளாக வேலை செய்யாமலிருக்கிறது இது காலஞ்சென்ற ஸ்ரீ மஹாமஹோபாத்யய யெக்ஞ சாமி சாஸ்திரிகளால் ஆரம்பிக்கப்பட்டு அரிய சேவை செய்துவந்ததையாரும் மறக்க முடியாது- கொஞ்சகாலம் ஸமாஜத்தின் ஆதரவில் ஒரு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு நடந்த வந்தது இதன் மூலம் மதுரை மன்னார்குடி முதலிய இடங்களிலும் ஷை ஸமாஜம் ஆரம்பிக்கும்படி வழிகாட்டியாக இருந்து ஒவ்வொரு வாரமும் தக்க வித்வான்களைக்கொண்டு அரிய மத சம்பந்தமான உபன்யாஸங்களை செய்து வந்தது. இப்படி மிகவும் அரிய பற்பல சேவை செய்துவந்த சபை இன்று பெயரளவில் மட்டும் இருக்கிறது. இது ஆஸ்திகள் களுக்கு வருத்தத்தை உண்டுபண்ணுகிறதென்பதில் ஐயமில்லை. ஆகவே எவ்வித அபிப்ராய பேதமிருந்தாலும் அவைகளைவிட்டு மதத்திற்கு ஆபத்தான இக்காலத்தில் ஒன்றுபட்டு மதாபிவிருத்தியை முன்னிட்டு மறுபடி முன்போலவோ இன்னும் அதிகமாகவே வேலைசெய்ய முன்வர வேண்டுமென சமாஜத் தார்களை பன்முறை வேண்டுக்கொள்கிறேன். (ஓ-நி)

ஆனந்தாச்ரம ஸம்ஸ்கிருத பாடசாலை

மேலக்காவேரி

ஷை பாடசாலையில் பயிலும் மாணவர் மாணவிகளுக்கு மதப்பற்று உண்டாக வேண்டி குடந்தை ரெட்டியார் தென்கரை ஸ்ரீமான என். எஸ். ரங்காசாரியார் அவர்கள் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம் தேவநாகரியில் 30 புத்தகம் வாங்கி இனாமாககொடுத்துதவி செய்திருக்கிறார்கள். அதற்காகஷை கல்லூரி கமிட்டியார் நன்றி செலுத்துகிறார்கள். இம்மாதிரி உதவிசெய்ய இன்னும் ஆஸ்திகோத்தமர்கள் முன்வர வேண்டுமென பிரார்த்திக்கிறார்கள்.

கே. ஆர். வைத்தியநாத சாஸ்திரிகள்.

அய்யலூர்

பட்டாபிஷேகம்

விக்ரம-௵ ஆவணி-௴ 15௳ முதல் இவ்வூர் மகாஜனங்களின் ஆதரவில் ஆடுதுரை பெருமாள் கோவில் கதாப்ரவீணகரும்ம ஸ்ரீ லக்ஷ்மீ காந்த சர்மா அவர்களால் ஸ்ரீமத் ராமாயணம் 15 தினங்கள் அங்கங்கே பலவித த்ருஷ்டாந்தங்களுடன் உபன்யாஸம் செய்யப்பட்டு புரட்டாசி 12 ஸ்ரீ ராமாபட்டாபிஷேகம் விமர்சையாய் ஊர்வலங்களுடன் முடிந்தது. தவிர ஸநாதன தர்மத்தின் பெருமையை பற்றியும் ஷை தர்மத்தை நன்றாய் தெரிந்து கொள்ள ஆர்ய தர்மம் பத்திரிகை உபயோகமாயுள்ளது என்றும் ஊருக்கு ஒரு பத்திரிகையாவது அவச்யம் வர வழைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். பக்கத்துக் கிராமங்களிலிருந்து கதை கேட்டவர்கள் தங்கள் தங்கள் கிராமத்திற்கு வரவேணுமாய் கேட்டுக் கொண்டார்கள். இவ்வூர் மகாஜனங்களின் வேண்டுகோளுக்கு இணங்கி ஐப்பசி 30 தினங்கள் ஸ்ரீமத் பாகவதம் நடத்துவதாய் ஒப்புக்கொண்டிருக்கிறார் (ஓ-நி)

உத்தராயண ப்ரதமவிவாஹமே ஸதாசாரம்.

(ராமானந்த உபாத்யாயர் திண்டுக்கல்)

நம்தேசத்தில் நீடூழிகாலமாய் உத்தராயணத்தில் தான் ப்ரதம விவாஹ மென்று அனுஷ்டித்து வருவது ஸதாசாரமா? அந்த பரம்பரையா? ஸதாசாரமாயின் சாஸ்திரத்திற்கும் ஆசாரத்திற்கும் ஒற்றுமையிருப்பதாகத் தெரிந்து அதை நிராகரிப்பதும், ஒற்றுமையில்லா விடில் பிடிவாதமாய் அந்த பரம்பரையாக நடத்திவருவதும் குற்றமாகுமென்று தமது ஸ்ம்ருதியிலும் தர்ம ஸூத்ரத்திலும் ஆபஸ்தம்பர் சொல்லியிருக்கிறார்.

இதுபோன்ற விஷயங்களில் நிர்ணயம் தெரிந்து கொள்ள நம் தேசத்தில் ப்ரமாணமாக விளங்கிவரும் வைத்தியநாத தீக்ஷிதீய ஸ்ம்ருதி முக்தாபலம் என்ற கிரந்தத்தில் சிலவிடங்களில் அவரவர் ஸ்வக்ருஹ்யத்தைக் கொண்டு வ்யவஸ்தை செய்து கொள்ள வேண்டும் என்று வ்யவஸ்தை செய்திருப்பது போல் விவாஹப்ரகரணத்திலும் "अत्र व्यवस्थामाह व्यास:" என்று விவாஹ வ்யவஸ்தை செய்யுமிடத்தில் அதர்ம்ய விவாஹம் காலத்தை எதிர் பார்ப்பதில்லை யென்றும், தர்ம்ய விவாஹம்காலத்தை ப்ரதீக்ஷிக்கும் என்றும் ஸங்கிரஹமாய் வ்யவஸ்தை செய்திருப்பதால் விவாஹகால விதியின் விரிவை அவரவர் க்ருஹ்யத்தில் சொல்லியபடி வ்யவஸ்தையை அனுஸரிப்பதே முறையாகும் என்று இவ்விவாஹ விஷயத்திலும் தீக்ஷிதரவர்கள் நினைத்ததாகிறது. அவ்விதம் விசாரித்ததில் நமது தேசாசாரத்திற்கும் சாஸ்திரத்திற்கும் ஒற்றுமை இருப்பதால் உத்தராயண ப்ரதம விவாஹந்தான் ஸதாசாரமாகும்.

அஃதெப்படி யெனில் ஸ்ம்ருதி முக்தாபலத்தில் சொல்லியபடி விவாஹமென்பது தர்ம்யம், அதர்ம்யம் என்று இரண்டு வித ப[illegible]கிறது. ஸமாவர்த்தன அனுபந்தத்தால் த[illegible]வர்ணிக, அத்ரைவர்ணிக, ப்ரதம, ப்ரதமேதரமென்று விவாஹம் பலவிதம் காண்கிறது.

சுருக்கிச் சொல்லுமிடத்தில் விவாஹம் ஐந்துவித பேதமுள்ளதாகிறது. இவைகளுக்குத் தனித்தனியாக காலவிதி சொல்லுவது மிகவிரிவாகுமென்று கருதி விவாஹ விஷயமாய் ஆபஸ்தம்பக்ருஹ்ய ஸூத்ரங்களால் விவாஹபேத காலவிதி ஸூசிப்பிக்கப்பட்டிருக்கிறது.

"उदगयनपूर्वपक्षाहः पुण्याहेषु कार्याणि ॥"

"सर्वर्तवो विवाहस्य शैशिरौ मासौ परिहाप्य उत्तमञ्च नैदाघम् ॥"

மேலே கண்ட "உதகயன" ஸூத்ரம் ஆபஸ்தமபர் தமதுக்ருஹ்யத்திற் சொல்லிய ஸீமந்தம் முதலிய சில கர்மாங்களைத் தவிர விவாஹம் ஸமாவர்த்தனம் முதலிய கர்மாக்களுக்கு உத்தராயணமே காலமாக வேண்டும் என்று விதிக்கவருகிறது. இரண்டாவது ஸூத்ரம் விவாஹத்திற்கு மட்டும் காலவிதியை விதிக்கப்ர விருத்திக்கின்றது.

ஆபஸ்தம்பக்ருஹ்ய ஸூத்ரத்திற்குவ்யாக்யான மாகிய தாத்பர்யதர்சனம் என்ற கிரந்தத்தில் மேலே கண்ட உதகயன ஸூத்ரவ்யாக்யானப்ரகரணத்தில் விவாஹத்திற்கு உத்தராயணம் முதலிய நியமம் விதிக்கப்பட்டிருந்த போதிலும் சில விடத்தில் ஓர் வித விவாஹத்தில்) உத்தராயணம் முதலிய நியமம் இல்லை யென்று விளங்குகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பாஷ்யத்தின் கருத்து என்ன வென்றால் இந்த ஸூத்ரத்திற்குச் சொந்தமான உத்தராயணம், சுக்லபக்ஷம் முதலிய நியமவிதியுள்ள விவாஹம் ஒன்று இருப்பதாகத் தீர்மானித்துக் கொண்டு இதற்கு மாறாக உத்தராயணம் முதலிய நியமவிதியில்லாமல் தக்ஷிணயனத்திலும் கிருஷ்ணபக்ஷமானாலும் செய்யக்கூடிய மற்றொரு விவாஹம் ஸர்வர்தவ: என்ற ஸூத்ரத்தில் சொல்லியிருப்பதாக ஸூசிப்பிக்கப் படுகிறது. இதை கவனிக்க விவாஹம் இரண்டு விதமென தீர்மானிக்கப்படுகிறது.

இரண்டாவதான ஸர்வர்தவ: என்ற ஸூத்ரத்தின் "सर्वर्तवो विवाहस्य" என்ற பகுதியால் மற்றொரு விவாஹமிருப்பதாக மேலே காட்டிய விவாஹத்திற்கு தக்ஷிணயனமும் உத்தராயணமுமாகிய மாதம் பன்னிரெண்டும் காலமென்றும் ஷை ஸூத்ரத்தின் பிற்பகுதியால் மேற்கண்ட விவாஹத்தின் அவாந்தர பேதத்தையும் அதற்கு மாதம் ஒன்பது என்று காலத்தையும் விதிக்கின்றது என்றுஸ்ம்ருதி முக்தாபலத்தில் தெளிவாகின்றது. இவ்விரண்டு ஸூத்ரங்களினால் விவாஹம் இரண்டுவிதமெனத்தீர்மானிக்கப்பட்டு ஒன்று தர்ம்ய விவாஹ மென்றும் மற்றொன்று அதர்ம்ய விவாஹமென்றும் ஸித்திப்பதின்மேல் இவ்விரண்டும் த்ரைவர்ணிக, அத்ரைவர்ணிக மென்றும், ஸஸமா வர்த்தன விஸமாவர்த்தன பேதத்தால் விவாஹ பேதம், காலபேதம் இவைகளின் விபரம் பின்வருமாறு:—

1. த்ரைவர்ணிக தர்ம்யப்ரதமவிவாஹம் 6 மாதம். 2. த்ரைவர்ணிக தர்ம்யப்ரதமேதர விவாஹம் 9 மாதம். 3. த்ரைவர்ணிக அதர்ம்ய ப்ரதம விவாஹம் 12 மாதம். 4. த்ரைவர்ணிக அதர்ம்ய ப்ரதமேதர விவாஹம் 12 மாதம். 5. (a) அத்ரைவர்ணிக தர்ம்ய ப்ரதம ப்ரதமே தரவிவாஹங்கள் 9 மாதம் (b) ஷை அதர்ம்ய ப்ரதமப்ரதமே தரவிவாஹங்கள். 12 மாதம்

மேலே காட்டிய ஐந்து விவாஹங்களில் 1. த்ரைவர்ணிகதர்ம்ய ப்ரதம விவாஹத்திற்கு "உதகயன" ஸூத்ரத்தினால் உத்தராயணம் மட்டில் காலமாக விதிக்கப்படுகிறது.

(2) (5.a) நம்பருள்ள விவாஹங்கள் ஸர்வர்தவ: என்று ஸூத்ரத்தின் "शैशिरौ मासौ परिहाप्य उत्तमं च नैदाघम्" என்ற பிற்பகுதியால் மாசி, பங்குனி நீங்கிய உத்தராயணமும் ஆடி நீங்கிய தக்ஷிணயணமும் காலமென விதிக்கப்படுகிறது. (3 4 5 b) என்ற நம்பருள்ள இம்மூன்று விவாஹங்கள் ஸர்வர்தவ என்ற ஸூத்ரத்தின் முற்பகுதியாகிய "सर्वर्तवो विवाहस्य" என்பதனால் தக்ஷிணயனமும் உத்தராயணமும் ஆகமொத்தம் மாதங்கள் 12ம் காலமென்று விதிக்கப்படுகிறது. இதனால் மேலே காட்டிய ஐந்துவிவாஹங்களுக்கும் கால விதி சொன்னதாயிற்று.

இவ்விதம் ஸூத்ரார்த்த விசாரணையில் கிடைத்திருக்கும் வ்யவஸ்தையில் 2, 4, 5, நம்பருள்ள விவாஹங்களில் விவாதமில்லை. அவ்விதமே 1,3 நம்பருள்ள விவாஹமிரண்டு மட்டில் ஸமா வர்தன ஸம்பந்த மிருந்தபோதிலும் த்ரை வர்ணிக்க தர்ம்ய ப்ரதம விவாஹத்திற்கும் 1. அதோடு கூடின ஸமாவர்தனத்திற்கும் ஸ்வ காலம் உத்தராயணமாகையால் அவ் விஷயத்திலும் விவாதமில்லை. ஆனால் 3 வதாகிய த்ரை வர்ணிக அதர்ம்ய ப்ரதம விவாஹத்திற்கு ஸமா வர்தன ஸம்பந்த மிருப்பதாலும் அவ் விவாஹத்திற்கு தக்ஷிணயனமும் காலமாக ஏற்பட்டிருப்பதாலும் ஷை விவாஹத்தை தக்ஷிணயனத்தில் செய்ய நேருமிடத்தில், ஸ்வ காலத்தில் ஸமா வர்தனத்தைச் செய்வதினால் "அனாச்ரமி" யென்ற தோஷமும், ஸ்வ காலத்தில் விட்டு தக்ஷிணயனத்தில் நடத்துவதினால் "உதகயன" வித்யதிக்ரம தோஷமும் ஸம்பவிக்கும். இந்த சங்கடத்தில் வியவஸ்தை செய்துகொடுக்க வேண்டுமென்று நினைத்தே

"सर्वर्तवो विवाहस्य इतिवचनात् यदा दक्षिणायनेपि विवाहः तदा समावर्तनं तत्समीपकाल एव

'ஸர்வர்தவோ விவாஹஸ்ய' என்ற வசனத்தினால் தக்ஷிணயநத்தில் ஸமாவர்தனமும் விவாஹ காலத்திலே தான் என்று ஆபஸ்தம்பக்ருஹ்ய தாத்பர்ய தர்சனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதை யனுஸரித்தே

"मार्गशीर्षे विवाहप्रसक्तौ दक्षिणायनेऽपि समावर्तनं भवति। अन्यथा अनाश्रमीति निषेधातिक्रमापत्तेः

மார்கழி மாதத்தில் விவாஹம் செய்ய நேருங்கால் ஸமாவர்தனமும் அப்பொழுதே செய்ய வேண்டும். இல்லா விட்டால் அனாச்ரமியென்ற நிஷேதத்தை அதிக்ரமிப்பதாகும்" என்று தர்மஸிந்துவிலும் அவ்விதமே "[illegible] नियमः உதகயனாதி நியமமில்லை" யென்று ஆச்வலாயன க்ருஹய நாராயணீயத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால், நிபந்தனங்களில் மூலஸ்ம்ருதி வசனம் காணப்படாததால் த்ரைவர்ணிக அதர்ம்ய ப்ரதம விவாஹத்திற்கும் ஸமாவர்தனத்திற்கும் "உதகயன" விதியே ப்ரபலமாகத் தோன்றுகிறது. ஆகையால் "तद् दोषः तदवस्थः" என்ற நியாயத்தை யனுஸரித்து த்ரைவர்ணிக அதர்ம்ய ப்ரதம விவாஹத்தோடு ஸமாவர்த்தனத்திற்கு ஏற்பட்ட "உதகயன" விதி விரோதத்தை ஸ்ம்ருதி வசன மூலமாய் பரிஹரிக்கப் படவில்லை யென்றால், "तथापि आसन्नविवाहस्य दक्षिणायनेपि तानि कार्याणि" என்று அவதாரிகை வைத்து, "दक्षिणायनमासेपि कृष्णपक्षेऽपि वा भवेत् । आसन्नेऽथ विवाहस्य समावर्तनं आरभेत् ॥ விவாஹம் ஸமீபத்த பொழுது தக்ஷிணயனமானாலும் க்ருஷ்ணபக்ஷமானாலும் ஸமாவர்தனத்தைச் செய்யவேண்டும் என்று வித்யா மாதவீயத்தில் விசேஷ விதி இருப்பதால் ஷை அதர்ம்ய ப்ரதம விவாஹத்தோடு தக்ஷிணயனத்தில் செய்யும் ஸமாவர்தனத்திற்கு "உதகயன" விதிவ்யதிக்ரம தோஷம் பரிஹரிக்கப்பட்டது. இதனால் என்ன வாயிற்றென்றால் 3வதாகிய அதர்ம்ய விவாஹத்தில் மட்டும் ஸமாவர்தனத்தை தக்ஷிண[illegible]த்தில் செய்ய விதியிருப்பதால் ஸமாவர்தனமும் த்ரைவர்ணிக அதர்ம்ய ப்ரதம விவாஹமும் தக்ஷிணயனத்திற் சேருவதால் மேலே காட்டிய ஸங்கடத்தில் அனாச்ரமித்வம், வித்யதிக்ரமம் என்ற இரண்டும் பரிஹரிக்கப் பட்டதாகிறது.

(இதன் தொடர்ச்சி 8 பக்கம் பார்க்க)

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கைகண்ட இந்தியா மருந்து இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிருர்கள்

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்



உத்தராயண பிரமத விவாஹமே ஸதாசாரம்

(7-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

இங்கு சைசிராதிகளைத்தவிர்த்து மற்ற எல்லா மாதங்களும் பிரதம அப்ரதம, பேதமின்றி விவாஹத்துக்கு ஏற்றவையென்று ஒரே அர்த்தமுள்ள "सर्वर्तवो........नैदाघम् ।" என்ற ஸூத்ரமானது தர்ம்ய விவாஹவிஷயமாகவே பொருந்தக்கூடிறது என்று ஏன் சொல்லக்கூடாது என்ற ஒரு ஆக்ஷேபணை தோன்றக்கூடும். அப்படியானுல் தர்ம்யேதரவிவாஹ விஷயமே ஆபஸ்தம்ப ஸூத்திரத்தில் சொல்லப்படவில்லையென்பது ஒன்று. உத்தராயண நியமமுள்ள விவாஹமே இல்லையென்பது மற்ருென்று; இவ்விரண்டு விஷயங்களையும் மூல ஸூத்திரங்களைக்கொண்டு நிர்ணயிக்க முடியவில்லையென்ருல் அதன் பாஷ்ய மூலமாக தெரிந்துகொள்வது அவச்யமாகிறது. "ஸர்வர்தவ: என்றவசனத்தினுல் உத்தராயண நியமமின்றி தக்ஷிணுயணத்திலும் செய்யலாம் என்ற ஓர் விவாஹத்திற்கு முன்ஸமாவர்த்தனத்தையும் தக்ஷிணுயனத்தில் செய்யலாம் என்று ஏற்படுவதால் உத்தராயண நியமமுள்ள விவாஹத்திற்கு ஸமாவர்தனம் உத்தராயணத்தில்தான் என்ற நியமம் விளங்குகிறது" என்று தாத்பர்ய தர்சனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதனுல் உத்தராயண நியமமுள்ள விவாஹம், உத்தராயண நியமமில்லாத விவாஹம் என்று விவாஹம் இரண்டுவிதமென்றும் இவ்விரண்டும் ஸமாவர்தன பூர்வகமாகையால் ப்ரதமவிவாஹங்களென்றும் ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. ஆகையால் ஆபஸ்தம்ப க்ருஹ்யத்தில் தர்ம்யேதர விவாஹமே சொல்லப்படவில்லையென்பதும் உத்தராயண நியமமுள்ள விவாகமில்லையென்பதும் பாஷ்யபங்திக்கு முற்றிலும் விரோதம்!

இந்த பாஷ்ய பங்தியை அநுஸரித்து வைத்யநாததீக்ஷிதீயத்தில் விவாஹப்ரகரணத்தில் தர்ம்யா தர்ம்ய விவாஹவ்யவஸ்தை சொல்லுமிடத்தில், ஷை "ஸர்வதவ:" என்ற ஸூத்ரத்திற்கு தர்ம்ய, அதர்ம்ய விவாஹ கால வ்யவஸ்தாபக யோக்யதையிருப்பதாக என்போலிகள் கூட தெரிந்துகொள்வதற்காகவே ஷை ஸூத்ரம் அங்கு அமைக்கப்பெற்றிருக்கிறது. இவ்விடத்தில் இந்த ஸூத்ரத்திற்கு தர்ம்ய விவாஹந்தான் விஷயமென்ருல் அவ்விடத்திலுள்ள ஆச்வலயான ஸூத்ரம் முதலிய வசனங்களுக்கு விரோதம் ஸம்பவிப்பதோடு அவ்விடத்திய "अत्र व्यवस्थामाह" என்ற தீக்ஷிதீய வ்யவஸ்தை குலைந்து விடும். ஆகையால் ஷை ஸூத்திரத்திற்கு அதர்ம்ய விவாஹ பரமாக அர்த்தம் அமைக்கப்பட்டிருப்பது தெளிவாகிறது. ஆகையால் இந்த ஸூத்திரத்திற்கு தர்ம்ய விவாஹம் ஒன்று தான் விஷயம் என்று சொல்வது நிபந்தன கிரந்தங்களுக்கும் விரோதம் ஸம்பவிக்கின்றது.

ஆனுல், "கன்னிகைக்கு ருதுதோஷம் ஏற்படுமென்ற பயம் ஏற்பட்டால் எந்த மாதத்தை வேண்டுமானுலும் விவாஹத்திற்கு எடுத்துக்கொள்ளுவது தோஷமாகாது" என்று வேறு நிபந்தனத்தில் சொல்லிய யுக்தி வசனத்திற்குப் பொருந்தவில்லையென்ருல் அதற்கு ஸமாதானம் பின்வருமாறு:— ருதுமதி விவாஹ தோஷம் தகப்பனைச் சாருமாகையால் உத்தராயண நியமம் வேண்டாமென்று சொல்லுவது அதர்மய விவாஹத்தில் அக்கன்னிகையை அதர்ம பீருவாகிய பிதா ஈடுபடுத்தவேண்டும் என்ற அபிப்பிராயம் இல்லை. தக்ஷிணுயனத்திலும் நடத்தக்கூடிய தர்ம்ய த்விதீயாதி விவாஹ வரனையாவது தேடிக் கொடுக்க வேண்டுமென்ற அர்த்தம் ஏன் புலப்படவில்லை? மேலும் உத்தராயணநியம விவாஹமே இல்லையென்ருல் விவாஹம் போகுமிடமெல்லாம் ஸமாவர்தனமும் போக வேண்டியதுடன் அதைப் பின்பற்றிச் செல்லும் வேத வ்ரதோபக்ரம உத்ஸர் ஜனங்களுக்கும் உத்தராயண நியமம் இல்லாமற் போவதால் க்ருஹ்ய யோக்த கர்மாக்களில் சௌளம், உபநயனம் இரண்டும் தவிர மற்றவிடத்தில் ப்ரவிருத்திக்காத "உதகயன" ஸூத்ரம் அஜாகள ஸ்தனமாகிறது. ஆகையால் ஸூத்ரவையர்த்யமும், மூல ஸூத்ரங்களுக்கும், அதன் பாஷ்யங்களுக்கும், நிபந்தன க்ரந்தங்களுக்கும். ஸதாசாரத்திற்கும் நேர் விரோதம் காணுவதால் "ஸர்வர்தவ" என்ற ஸூத்ரத்திற்கு தர்ம்ய விவாஹம் ஒன்று தான் விஷயம் என்று சொல்லுவது முற்றிலும் சாஸ்திர விரோதம்.

ஆகையால் 'உதகயன' ஸூத்ரத்தினுல் உத்தராயண தர்ம்யப்ரதம விவாஹமும் ஸித்திக்கிறபடியால் நாம் நீடூழி காலமாய் அனுஷ்டித்து வரும் உத்தராயணப்ரதம விவாஹம் ஸதாசாரமேயொழிய அந்த பரம்பரையல்ல.

கோட்டையூர் சனுதனதர்ம வித்யாலயம்.

மதராஸ் தண்டலம் T. S ராமஸாமி அய்யர் திறந்துவைத்தார்

கோட்டையூர் வர்ணுஸ்ரமசுயராஜ்ய சங்கத்தார்கள் ஸ்ரீமான் க.. வீ. சொ. வீ. அழகப்பச் செட்டியாரவர்கள் பொருளுதவியால் ஷையார் கட்டிடத்தில் 15—9—40உ பகல் 1½உ மணிக்கு ஆரம்பமாகியது முதலில் விநாயகர் பூஜை, சரஸ்வதிபூஜை நடந்தபிறகு மதராஸ் பிராந்திய வர்ணுஸ்ரமசுயராஜ்ய சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீமான் தண்டலம் T. S. ராமசாமி அய்யரவர்கள் வித்தியாலயத்தைதிறந்து வைத்து சொற்பொழி வாற்றினுர்கள் அவ்வமயம் அநேக மாணவ மணவிகள் வந்திருந்தார்கள். அவர்களுக்கு நீதிவாக்கியங்கள் போதிக்கப்பட்டது.

கும்பகோணம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிஜகத்ருகு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவமிகள் அநுக்கித்ஹித்து மடம் ஆஸ்த்தான வித்வான் பிர்மஸ்ரீ வேதந்தபூஷணம் A. R. வெங்கிட்டராமசாஸ்திரிகள் மூலம் அநுப்பிய பிரசாதங்கள், மாணவர்,களுக்கும், மாணவிகளுக்கும், மற்றும் அங்கு விஜயம் செய்திருந்த அனைவருக்கும் கொடுக்கப்பட்டது

அதற்கு பிறகு மதுரைடவுன் வர்ணுச்ரம சுயராஜ்ய சங்கத் தலைவர் ஸ்ரீமான் கிருஷ்ணசாமி அய்யங்கா ரவர்களும், கோவிலூர் N. V. ரெங்கனுத சாஸ்திரி களவர்களும், கும்பகோணம் மடம் ஆஸ்தானவித்வான் பிரம்மஸ்ரீ A. R. வெங்கிட்ருமசாஸ்திரிகளும், திருவண்ணுமலை ஸ்ரீலஸ்ரீ சு. கிப்பைய்யா சுவாமிகளவர்களும் சபையோர்கள் மனது பரவசப்படும் படி சனுதனதர்ம வித்யாலயத்தின் நோக்கங்களையும் அதன் அவசியமும், ஒவ்வொரு ஊரிலும் அது ஸ்தாபனம் செய்ய வேண்டுமென்றும் அதன் கொள்கைகளை விளக்கியும் நீண்ட நேரம் சொற்பொழிவாற்றினுர்கள். இதில் குப்புசாமி அய்யர் பொன்னுசாமி பிள்ளை முதலியவரின் தொண்டு போற்றத் தக்கது பின்னர் யாவருக்கும் காரைக்குடி வெங்கிடாசாரிய சுவாமிகள் வந்தனுேபசாரம் கூற இனிது நிறைவேறியது.

[ஒ. நி.]

Printed by S. Kalyanasundaram at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam, Published by A. Gopaladesikachariar and S, Kalyanasundaram,